# சாதி எனும் சுவரை தகர்த்திடுவோம்

***திருமிகு. நவநீதம் பிள்ளை***
*மனித உரிமைகளுக்கான ஐ.நா வின் உயர் ஆணையர்*

சமீபத்தில் ஆசியாவிலிருந்து சாதியால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து, உடைந்துபோன பொதுக் கழிப்பிடத்தின் சுவரிலிருந்த ஒரு செங்கலை எனக்குத் தந்தனர். அது வெறும் செங்கல் மட்டுமன்று. தாழ்ந்த சாதி என்று சொல்லப்பட்டு பொதுக் கழிப்பிடங்களை எவ்வித உபகரணங்களும் இல்லாமல் வெறும் கையால் சுத்தப்படுத்தும் பணியை தலைமுறை தலைமுறையாகச் செய்துவரும் மக்களின் ஒன்றுபட்ட கோபாவேசத்தின் உலகளாவிய போராட்டத்தின் வெளிப்பாடே இந்த செங்கல் என்று எனக்குத் தோன்றுகிறது.

இந்த அவலமான பணி, சட்டப்படி தடைசெய்யப்பட்டிருந்தாலும் பல இடங்களில் இன்னமும் தொடர்ந்தபடியே உள்ளது. இந்த வேலையை யாரும் விருப்பப்பட்டு செய்வதில்லை. பல தலைமுறையாக ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் மீது, அவர்களது சாதியை அடையாளம் காட்டி இப்பணி திணிக்கப்படுகிறது. ஏற்கனவே சாதியால் பாகுபடுத்தப்பட்ட இம்மக்கள் செய்யும் வேலையின் காரணமாகவும் மேலும் அவலத்திற்குரிய சூழலுக்கு தள்ளப்படுகின்றனர். அதன் விளைவு, சமூக ரீதியான ஒதுக்குதலும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுதலும் தொடர்ந்து பல தலைமுறையாக நீடிக்கிறது.

இன்று, சாதியால் பாதிக்கப்பட்ட சமூகங்களும் குடிமைச் சமூக ஆர்வலர்களும் மனிதர்களுக்குள் பாகுபாட்டை உயர்த்திப்பிடிக்கும் கண்ணுக்குப் புலப்படாத இந்தக் கொடிய சாதி எனும் சுவரை தகர்த்திட நம்பிக்கையோடு பணியாற்றி வருகின்றனர். அதற்காக பாகுபாடுகளுக்கு எதிராகவும், சமத்துவத்திற்காகவும் புதிய சர்வதேச நியதிகளை உருவாக்கவும் அதை வளர்த்தெடுக்கவும் அவர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளனர். அவர்களின் மன உறுதி, கடப்பாடு மீது எனக்கு பெரும் மரியாதை உள்ளது. தென்னாப்பிரிக்காவில் இனவெறி காலத்தில் வெள்ளையர் அல்லாத சிறுபான்மை இனத்ததைச் சார்ந்த பெண் என்பதால், பாகுபாடு பற்றி எனக்கும் நல்ல புரிதல் இருக்கிறது.

தீண்டாமை எனும் கொடிய பழக்கத்தினால் உலகம் முழுவதும் சுமார் 26 கோடிப் பேர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு கலாச்சாரங்களில் சடங்கு ரீதியாக கற்பிதம் செய்யப்படும் தூய்மை, அசுத்தம் எனும் எண்ணத்தின் அடிப்படையில் சாதி எனும் பாகுபாடு தழைத்தோங்கி வருகிறது. இந்தப் பிரச்சனை ஒரே ஒரு சமூகத்திற்கோ அல்லது ஒரே ஒரு பகுதிக்கு மட்டுமோ உரியது என்று கருத முடியாது. மாறாக இன்று இது ஒரு சர்வதேசப் பரிமாணம் கண்டுள்ளது.

மனித உரிமையின் அடிப்படைப் பண்பான சமத்துவம், பாகுபாடின்மை ஆகிய அம்சங்களை நிராகரிக்கக் கூடிய விசயமாக சாதி திகழ்கிறது. ஒரு தனி நபரையும் அவர்

பிறந்த சமூகத்தையும் சுரண்டலுக்கும், வன்முறைக்கும், சமூக ஒதுக்ககுதலுக்கும், ஏற்றத்தாழ்விற்கும் பல தலைமுறையாக இந்தச் சாதி ஆட்படுத்துகிறது. சாதி ரீதியான பாகுபாடு என்பது மனித உரிமை மீறல் மட்டுமன்று. பாதிக்கப்பட்ட நபரை சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமை மீறல்களுக்கும் ஆட்படுத்துகிறது.

"தாழ்ந்த சாதி" என்று முத்திரை குத்தப்பட்ட நபர்கள் எப்பொழுதுமே அதிக வருமானமில்லாத அவலமான நிலையில் செய்யப்படும் பணிகளில் பல தலைமுறைகளாக ஈடுபடுத்தப்படுகின்றனர். இவர்களுக்கு விவசாய நிலங்களோ கடன் உதவித் திட்டங்களோ கிடைப்பதே இல்லை. இவர்களில் பெரும்பாலானோர் மீளமுடியாத கடன் சுமையிலும், கொத்தடிமை முறையிலும் வாழ்ந்து வருகின்றனர் என்பதே நிதர்சனம். இந்த நடைமுறை கண்டிப்பாக நவீன கால அடிமைத்தனம் என்றே சொல்ல வேண்டும். நீதிக்காகவும் இழப்பீட்டிற்காகவும் போராட முற்படும் இம்மக்கள் சந்திக்கும் இடர்பாடுகள் அசாதாரணமானவை. இம்மக்களிடம்தான் எழுத்தறிவின்மையும் குழந்தைத் தொழிலாளர் முறையும் மிக அதிக அளவில் உள்ளது. அதிலும் பெண்களைப் பொருத்த வரையில், பாகுபாடோடு சேர்த்து ஏழ்மையும் அவர்களை கூடுதல் சுரண்டலுக்கு உட்படுத்துகிறது.

இந்த அவலத்தை தடுத்து நிறுத்த பல சட்டங்களும் திட்டங்களும் அறிவிக்கப்பட்டுதான் இருக்கின்றன. சாதி ரீதியான பாகுபாட்டை அரசியல் சாசனம் உறுதியோடு தடைசெய்கிறது. தாழ்ந்த சாதி என்று சொல்லப்படும் சிலர் நாட்டின் மிக உயரிய பதவிகளுக்குக்கூட தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கல்வி, வேலை வாய்ப்பில் இம்மக்களுக்கு முன்னுரிமை தரும்பொருட்டு சிறப்பு சட்டங்கள்கூட இயற்றப்பட்டுள்ளன. அதோடு, இவர்கள் மீதான வன்முறை மற்றும் சுரண்டல் ஆகியவற்றிற்கெதிராக சட்டங்கள்கூட அறிமுகமாகியுள்ளன. சாதி ரீதியான வன்முறைக்குட்பட்ட நபர்களுக்கு நீதியும், நிவாரணமும் வழங்கிட நீதித்துறை பல நேரங்களில் தலையீடுகளைச் செய்துள்ளது. மேலும் இம்மக்களின் துயர் துடைப்பில் ஆர்வம் கொண்ட நிறுவனங்கள் செம்மையாக தம் பணியைச் செய்து வருகின்றன.

சர்வதேச அளவில் ***'அனைத்து வகை இன ரீதியான பாகுபாடுகளை அகற்றும் உச்சி மாநாடு'*** பிறப்பின் அடிப்படையில் பாகுபடுத்தப்படுவதை இனப்பாகுபாட்டின் ஓர் அடிப்படை அம்சமாகக் கருதுகிறது. இதைத்தான், 2001-இல் டர்பன் நகரில் கூடிய மாநாட்டுப் பிரகடனமும் அங்கீகரிக்கிறது. இப்பாகுபாட்டை நிரந்தரமாகக் களைவதற்கு வகுக்கப்பட்ட திட்டத்தை இந்தாண்டு ஏப்ரல் மாதம் உறுப்புநாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

எனினும், சாதியப்பாட்டை களைவதற்கு ஆழமான, விரிவான சமூகத்திட்டங்களும் கொள்கைகளும் தேவைப்படுகின்றன. பிறப்பு, அதிகாரம், பணபலம் இவற்றின் அடிப்படையில் புரையோடிப்போயிருக்கும் சமூக, கலாச்சார, பண்பாட்டு நம்பிக்கைகளை களைவதற்கு ஆக்கப்பூர்வமான கல்வித் திட்டம் மிக அவசியமான ஒன்றாகிறது. அதற்கும் மேலாக, நாட்டின்

வளர்ச்சி குறித்த விவாதங்கள், திட்டமிடல், மீளாய்வு போன்ற விசயங்களில், சாதியால் பாதிக்கப்பட்ட மக்கள் முழுமையாகப் பங்குபெறவும் அவர்களது குரலைப் பதிவு செய்வதும் மிகவும் அவசியம். தென்னாப்பிரிக்காவில் இனவெறியை முடிவுக்கு கொண்டுவருவதில் ஆக்கப்பூர்வமான பங்களிப்பைச் செலுத்திய சர்வதேச சமூகம், இந்தப் பிரச்சனையிலும் அதேபோன்றதொரு எழுச்சிமிக்க பங்களிப்பை இயல்பான உத்வேகத்தோடு செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

சமூக ஒதுக்குதலுக்கும் விளிம்புநிலைப்படுத்துதலுக்கும் பன்நெடுங்காலமாக ஆட்படுத்தப்பட்டிருக்கும் இம்மக்களுக்கு, அவர்களுக்கான விடுதலையை வகுத்துக்கொடுப்பதில் இனி மேலும் காலம் தாழ்த்தாது பணியாற்ற வேண்டும். தங்கள் கிராமங்களில் தேர்தல்களின்போது உயர்சாதி வேட்பாளர்களுக்கெதிராக தங்களுக்கு விருப்பப்பட்ட நபர்களுக்கு வாக்களிக்க முனைந்து, அதற்காக ஊரைவிட்டே விரட்டப்பட்ட இந்த அடித்தட்டு மக்களின் தீரத்திற்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். இம்மக்களுக்கென்று அரசாங்கம் வழங்கிய பல்வேறு நலத்திட்டங்களின் உதவிகள் கிடைக்காமல், இறுதியில் வறுமையால் மடிந்த அவர்களின் அறநெறிக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். உயர் சாதி மக்களால் தீயசக்தி என்று வருணிக்கப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டு மனிதக் கழிவுகளை உண்ணுமாறு அவமானப்படுத்தப்பட்ட இந்த உழைக்கும் வர்க்கத்து பெண்கள் பலரின் நெஞ்சுரத்துக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். இவர்கள் அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும். இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இந்த அவலங்கள் எமது பாரம்பரியம் என்றோ ***‘வீட்டுப் பிரச்சனை’*** என்றோ கூறி பலகோடி மக்கள் சுரண்டப்படுவதை இனியும் ஏற்க முடியாது.

மனித உரிமைகளைக் காக்கவும், வளர்க்கவும் உருவாக்கப்பட்ட பல அரசுப் பிரநிதிகளை உள்ளடக்கிய முதன்மையான அமைப்பு என்று கருதப்படும் மனித உரிமை கவுன்சில், ***‘செய்யும் பணி மற்றும் பிறப்பின் அடிப்படையில் காட்டப்படும் பாகுபாடுகளை முற்றாக ஒழிக்க வகுத்த வழிகாட்டுதல்கள், திட்ட முன்வரைவு 2009’*** -ஐயும் முன்னெடுத்துச் செல்லவேண்டும். இந்தத் திட்ட முன்வரைவு, தற்போது நடைமுறையில் உள்ள பல பாகுபாடுகளுக்கெதிரான கொள்கைப் பிரகடனங்களுக்கு கூடுதல் வலுச்சேர்ப்பதாக இருக்கும். எனவே இப்புதிய திட்டமுன்வரைவை அனைத்து நாடுகளும் ஒன்றுபட்டு ஏற்றுக்கொள்ள வேண்டும். அவமானத்திற்குரிய சாதியப் பாகுபாட்டை அழித்தொழிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. அசைக்க முடியாதது என்று ஒரு காலத்தில் கருதப்பட்ட அடிமைமுறையையும் இனவெறியையும் தகர்த்தெறிந்த நமது மானுடம் சாதி எனும் இக்கொடிய அரணையும் நிச்சயம் தகர்த்தெறியும்.

~~*~~